[10th August 1965

திருச்சிராப்பள்ளியில் காலரா நோய்

* 190 கேள்வி—திரு. எம். எஸ். மணி : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-ம் ஆண்டு மே மாதத்தில் திருச்சிராப்பள்ளியில் காலரா நோய் பரவியதை அரசாங்கம் அறியுமா ?

(இ) ஆம் எனில், அதன் காரணமாக அரசாங்க ஆஸ்பத்திரி களில் அனுமதிக்கப்பட்டவர்கள், இறந்தவர்கள் முறையே எத்தனை பேர் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) சந்தேகமான காலரா கேசுகள் மூன்றில் ஒருவர் இறந் தார்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ADJOURNMENT MOTION *RE* ALLOTMENT OF SUGAR QUOTA TO FAMILY CARD MERCHANTS IN MADRAS CITY.

SRI K. A. MATHIALAGAN : I have given notice of the following adjournment motion under Rule 42 of the Madras Legislative Assembly Rules, namely :—

"That the House do stand adjourned to discuss the following urgent matter of public importance, viz.,—

"Discriminate allotment of sugar quota to particular family card merchants and also to several non-family card merchants leaving hundreds of family card merchants who are authorised to distribute essential articles of food like Rice, Wheat, Gram and Bengal Gram in Madras City and the consequent acute scarcity in several localities of Madras City predominently inhabited by lower middle people and poor slum-dwellers due to faulty, discriminate irregular arrangement of allotment of sugar quota.' "

இந்தப் பிரேரேபணையை நான் இந்த மன்றத்தின் முன் விவா திப்பதற்காக இந்தச் சபையை ஒத்தி வைக்க வேண்டும் என்று சொல்லக் காரணம், நம் சட்டமன்ற விதிகளின்படி நம் சர்க்காரின் பொறுப்பு இதிலே மிகத் தெளிவாக சம்பந்தப்பட்டிருக்கிறது. இன்று சர்க்கரையை எல்லோருக்கும் கொடுக்க வேண்டிய 'ரெஸ் பான்ஸிபிலிட்டி' இந்த விதிகளின்படி எப்படி வருகிறது என்பதை மட்டும் சொல்கிறேன். தெளிவாக இருக்கிறது என் தீர்மானம்.

கனம் சபாநாயகர் : எல்லாம் சரிதான். How does it come as an adjournment motion? விதியை மட்டும் சொல்லுங்கள்.

SRI K. A. MATHIALAGAN : On page 13 of our Assembly Rules, in Rule 50, sub-clause (*x*), it is stated as follows :—

"The motion must refer to a matter in which the responsibility of the Government is clearly involved".